**28.01.2026**

அ.வ.எண்.**38/2021**

<u>பி.சா.**2** சிவா குறுக்கு விசாரணை</u>

**1**. வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் தாவா பி அட்டவணை சொத்திற்கு வாதிதான் உரிமையாளர் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா பி அட்டவணை சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. அது புறம்போக்கு நிலம் என்றால் சரிதான். தாவா பி அட்டவணை சொத்து சர்வே எண்.**293/1**ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் **1** ஏக்கர் இருக்கும். வாதி மொத்தம் **2** அட்டவணை சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் அதில் எ அட்டவணை சொத்து வாதியின் பட்டா நிலம், பி அட்டவணை சொத்து புறம்போக்கு நிலம் வாதி வழிக்காக பயன்படுத்தி வருகிறார் என்றால் சரிதான்.

**2**. தாவா எ அட்டவணை சொத்தை வாதிக்கு நான் தான் கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த சொத்திற்கு எந்த பக்கம் சாலை உள்ளது என்றால் கிழக்கு பக்கம் சாலை உள்ளது. தாவா எ அட்டவணை சொத்திற்கும் கிழக்கே உள்ள சாலைக்கும் நடுவில் புறம்போக்கு நிலம் உள்ளதா என்றால் இல்லை. தாவா கிராமத்தில் எனக்கு விவசாய நிலம் உள்ளதா என்றால் இல்லை. தாவா எ அட்டவணை சொத்து விற்பதற்கு முன்பு சாலையின் வழியாக தாவா பி அட்டவணை சொத்தின் வழியாகதான் தாவா எ அட்டவணை சொத்திற்கு சென்றேன் என்றால் சரியல்ல. எங்களுடைய பதிலுரையில் தாவா எ அட்டவணை செல்வதற்கு

தாவா பி அட்டவணை சொத்தை வழியாக ஒதுக்கி கொடுத்துள்ளோம் என்று கூறியுள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் வழிக்காக ஒதுக்கிய இடத்தின் நான்கு மால்கள் கிழக்கில் மங்கலம் சாலை, மேற்கே தாவா எ அட்டவணை சொத்து, வடக்கு மற்றும் தெற்கிலும் சர்வே எண்.293/1 மிகுதி இடம் என்றால் சரிதான்.

3. தாவா பி அட்டவணை சொத்தை வாதி அனுபவித்து வருவதை நான் தடுத்ததால்தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் வாதி நாங்கள் அனுபவித்து வரும் சொத்தில் உள்ள மரங்களை வெட்டினதால்தான் தடுத்தோம். வாதி எந்த தேதி, மாதம், வருடம் மரங்களை வெட்டினார் என்றால் சுமார் 2015ம் வருடம் இருக்கும். புறம்போக்கு நிலத்தில் உள்ள பனைமரங்களை வெட்டியதற்கு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வட்டாட்சியர் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் இல்லை. நான் இந்த வழக்கிற்காக வாதிகள் பனைமரத்தை வெட்டினார்கள் என்று பொய்யாக சொல்கிறேன், அவ்வாறு இருந்திருந்தால் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல.

4. நான் மேற்சொன்ன சம்பவத்திற்கு எந்த புகாரும் காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது பிரமாணவாக்குமூலத்தில் வாதியின் முகவரான ரமேஷ் தகப்பனார் பட்டா நிலத்தை ஏமாற்றி நில அபகரிப்பு வழக்கில் சிறைக்கு சென்றார் என்று கூறியுள்ளேன், அது சம்பந்தமாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பி அட்டவணை புறம்போக்கு நிலத்தை அனுபவித்து

வந்திருந்தால் வருவாய் துறை ஆவணங்களில் ஆக்கிரமிப்பாளர் என்று பதிவேடு இருந்திருக்கும், அவ்வாறு எதாவது ஆவணம் இருக்கிறதா என்றால் இல்லை. தாவா பி அட்டவணை சொத்தின் மொத்த விஸ்தீரணத்தில் நாங்கள் எந்த காலத்திலும் பயிர் வைத்து விவசாயம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**5**. தாவா பி அட்டவணை சொத்தின் **20** செண்ட் நிலத்திற்கு வாதி அனுபவித்து வருவதற்கு எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். எனவே வாதி கோரியவாறு தாவா பி அட்டவணை சொத்தின் **20** செண்ட் நிலத்திற்கு தீர்ப்பாவதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். **07.04.2021** ஆண்டில் நாங்கள் வாதியின் அனுபவத்தை பி அட்டவணை சொத்தில் தடுத்ததால்தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. **2021**ம் வருடம் வாதியின் பொது முகவர் ரமேஷ் என்பவர் பி அட்டவணை சொத்தை பயன்படுத்தியபோதுதான் தடை செய்தோம் என்றால் அவர் நாங்கள் அனுபவித்து வந்த மீதம் இடத்தில் உள்ள மரங்களை வெட்டினதால்தான் பிரச்சனை ஏற்பட்டது. வாதி கோரியவாறு தீர்ப்பாக எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.